**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
Case No. CC 61 of 2017

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு. விவேகானந்தன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th **day of September** 2025.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்போது கரடிவாவியில் குடியிருந்து கொண்டு விசைத்தறி வைத்து நடத்திவருகிறேன். வழக்கு சம்வத்தில் இறந்துபோன கதிர்வேல் எனது தங்கையின் கணவர் ஆவார். கடந்த 19.04.2015 ம் தேதி மாலை 4.00 மணியளவில் நான் வீட்டில் இருந்துபோது எனது உறவினர் சக்திவேல் என்பவர் எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கோவை அவினாசி ரோட்டில் Le meridian Hotel அருகில் உள்ள அன்னை டவர்ஸ் எதிரி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், கோவை KMCH மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்திருப்பதாக கேள்விபட்டு மருத்துவமனை சென் று பார்த்தபோது அவர் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார். எனது தங்கையின் கணவருக்கு பின்னந்தலையின் தண்டு வடத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. விபத்து குறித்து விசாரித்தபோது எனது தங்கையின் கணவர் இருசக்கர

வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது அவர் பின்னால் வந்த மற்றொரு இருசக்கர வாகனம் மோதிவிட்டதாக தெரிந்து கொண்டேன், சிகிச்சை பலனின்றி கடந்த 21.04.2015 ம் தேதி எனது தங்கையின் கணவர் இறந்துவிட்டார். மேலும் போலிசார் எனது தங்கையின் கணவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டபோது நானும் உடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது சக்திவேல் என்பவர் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். என் தங்கையின் கணவர் விபத்து நடந்து 2 நான் சிகிச்சைக்கு பிறகுதான் இறந்தார் என்றால் சரிதான். சம்பவ இடத்தை நான் மறுநாள் சென்று பார்த்தேன். என் தங்கையின் கணவருக்கு குடிபழக்கம் கிடையாது. மொத்தம் என்னை 3 முறை போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னை சவக்கிடங்கில் வைத்து விசாரித்தார்களா என்றால் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் என் தங்கையின் கணவர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சவக்கிடங்கில் வைத்து கையொப்பம் செய்தேன் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.09.25 19:56:36 +0530

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**